**Starting time 12:49 P.M.**

# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 198/2014**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 04.10.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : தர்மலிங்கம் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> வாதி, பிரதிவாதிகள் என்றால், என்ன என்பது பற்றி எனக்கு தெரியும். நான் இந்த வழக்கில் 1-ஆம் பிரதிவாதி என்றால், ஆமாம். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால், ஆமாம். எந்த ஆவணத்தையும் படித்துப் பார்த்துதான் கையொப்பம் போடுவேன் என்றால், ஆமாம்.

2. இந்த வழக்கின் 2-ஆம் பிரதிவாதி என்னுடைய இளையமகன் கிருஷ்ணமூர்த்தி என்றால், ஆமாம். 3-ஆம் பிரதிவாதி என்னுடைய இளைய மருமகள் என்றால், ஆமாம். என்னுடைய பிறந்த தேதி என்ன என்றால், ஞாபகம் இல்லை, எனக்கு 80 வயதாகிறது. நான் என்ன படித்துள்ளேன் என்றால்,1958-ல் 8-ஆம் வகுப்பு படித்தேன். என்னுடைய தந்தையின் பெயர் ராமசாமி உடையார் என்றால், ஆமாம். என் தகப்பனாருக்கு நான் ஒரே வாரிசு என்றாலும், வேறு யாரும் வாரிசு இல்லை என்றாலும் ஆமாம்.

3. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு 19.01.1933 தேதியிட்ட பாகப்பிரிவினை

ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றால், ஆமாம்.பி.வா.சா.ஆ.1 மூலம் எனது தகப்பனாருக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டது என்றால், சுமார் 10 ஏக்கருக்கு மேல் இருக்கும். நான் எத்தனாம் வகுப்புடன் என் பள்ளிப்படிப்பை முடித்தேன் என்றால், 1958-ல் 8-ஆம் வகுப்பை முடித்தேன். நான் பி.யூ.சி வரையிலும் படித்துள்ளேன் என்றால், சரியல்ல, 8-ஆம் வகுப்பு வரை படித்ததற்கான அத்தாட்சி வேண்டுமானால் தருகிறேன். 1995-ல் என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால், தவறு, 1997 லிலோ, 1999 லியோதான் இறந்தார். எனக்கு சரியாக நனைவில் இல்லை. இறப்பு சான்றிதழ் வைத்துள்ளேன்.

4. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால், எனக்கு 19 வயதிலலேய திருமணம் நடந்து விட்டது, எந்த வருடம் என ஞாபகம் இல்லை. என்னுடைய 8-ஆம் வகுப்பு கல்வி சான்றிதழில் என்னுடைய பிறந்த தேதி இருக்கும் என்றால், இருக்கும். அதை நான் பார்த்துள்ளேன். எனக்கு 2 ஆண்பிள்ளைகள் 3 பெண் பிள்ளைகள் என்றால், சரிதான். என்னுடைய முதல் மகள் பெயர் வசந்தா என்றால் ஆமாம். 2-வது வாதி ராஜசேகர் என்றால், சரிதான். 3 வது புஸ்பராணி. 4-வது மகள் கலைச்செல்வி. 2-ஆம் பிரதிவாதி என்னுடைய 5 வது மகன் என்றால், சரிதான்.

5. என்னுடைய மூத்த மகள் வசந்தாவை அரசுப்பள்ளியில் 11-ஆம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால், 11-ஆம் வகுப்பு பாதியிலேயே நிறுத்திவிட்டேன். புஷ்பராணி மற்றும் கலைச்செல்வி ஆகியோரை 10-ஆம் வகுப்பு வரை படிக்க வைத்துள்ளேன் என்றாலும், அனைவரும் அரசு பள்ளியிலேதான் படிக்க வைத்தேன் என்றாலும், சரிதான். வாதி அரசு பள்ளியில்தான் 12-ஆம் வகுப்பு வரை படித்தார் என்றால், ஆமாம். வடசென்னிமலை அரசு பள்ளியில்தான் படித்தார். வாதி வடசென்னிமலையில் உடள்ள அரசு கல்லூரியில் பி.எஸ்.ஸி படித்தார் என்றால், ஆமாம், எம்.எஸ்.ஸி அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தொலைதூரக் கல்வியில் படித்தார். 1990-ஆம் ஆண்டில் படிப்பை முடித்தார் என்றால், ஞாபகம் இல்லை.

6. 2-ஆம் பிரதிவாதி நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பி.வி.எஸ்.ஸி

படித்தார் என்றால், ஆமாம். 1991-லிருந்து 1995 வரையிலும் படித்தார் என்றால், 5 வருட படிப்புதான் வருடம் ஞாபகம் இல்லை. என் முதல் மகள் வசந்தாவிற்கு எந்த வருடம் திருமணம் செய்து வைத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. சுமாராக இன்றிலிருந்து எத்தனை வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது என்றால், சுமார் 20, 25 வருடங்கள் இருக்கும்.

7. என்னுடைய மூத்த மகள் வசந்தாவிற்கு திருமணத்தின் போது 40 பவுன் போட்டேனா என்றால், இல்லை, 3 பெண்கள் இருந்ததால் சுமார் 25 பவுன் போட்டு வீட்டிற்கு தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுத்து சீர்வரிசையை சிறப்பாக செய்தேன். வசந்தா திருமணத்தின் போது காட்டுக்கோட்டை புதூரில் உள்ள மெத்தை வீட்டை விற்றுவிட்டேன் என்றால், சின்ன பெண்ணின் திருமணத்திற்காகத்தான் விற்றேன். முதல் பெண்ணுக்கு என் தாயாரின் நகைகளையும் எங்களிடம் இருந்த நகையையும் விற்று திருமணம் செய்துவிட்டேன். 2-வது பெண்ணின் திருமணத்திற்குதான் வீட்டை விற்றேன். 1986-ல் தான் புஷ்பராணிக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால், வருடம் ஞாபகம் இல்லை.

8. புஷ்பராணிக்கு திருமணமாகி 1, 2 வருடங்களுக்குள்ளாக கலைச்செல்விக்கும் திருமணம் செய்துவிட்டேன் என்றால், ஆமாம். புஷ்பராணி மற்றும் கலைச்செல்விக்கு திருமணம் செய்வதற்காக மெத்தை வீட்டை விற்றும், நானும் எனது தந்தையும் சேர்ந்து அரசு என்பவரின் மனைவிகளான தனம், ராணி ஆகியோருக்கு நிலத்தை விற்றும் திருமணம் செய்து வைத்தோம் என்றால், ஆமாம். 1972-ல் நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து ஒரு கைலாச கவுண்டர் மனைவி முத்துலட்சுமி என்பவருக்கு 3-1/2 ஏக்கர் நிலத்தை விற்பனை செய்தோம் என்றால், ஆமாம்.

9. அந்த பத்திரத்தில் என் பெரிய மகனுக்கு 6 வயது என்றும், 2 வது மகனுக்கு 1 வாரம் பெயரிடப்படாத ஆண் சிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். 1993-ல் எனது அப்பாவிற்கு பிரிந்த ஒரு பாகத்தை தங்கராசு என்பவருக்கு 78 செண்ட் நிலத்தை

விற்பனை செய்தார் என்றால், அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றாலும், ஆமாம்.

10. நான் என்னுடைய தகப்பனாரை அவர் இறக்கும் வரையிலும் நல்ல முறையில் பராமரித்து வந்தேன் என்றால், ஆமாம். 1993-ல் மீண்டும் என் தகப்பனார் தங்கராசுவிற்கு 4-1/2 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டார் என்றால், ஆமாம். விற்ற தொகையை என்னிடம் கொடுத்தாரா என்றால், இல்லை. 1992-ல் நானும் எனது தகப்பனாரும் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், ஆமாம். அந்த பாகப்பிரிவினைபத்திரத்தில் A அட்டவணை என் தகப்பனாருக்கும், B அட்டவணை எனக்கும் பிரிந்தது என்றால், ஆமாம்.

11. நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து மொத்தத்தில் ஒரு 10 ஏக்கர் நிலம் விற்றுவிட்டோம் என்றால், சரிதான். 2-ஆம் பிரதிவாதி தற்போது ஆத்தூரில் வசித்து வருகிறார் என்றால், ஆமாம். எனது மனைவி பாப்பம்மாள் 2010-ஆம் ஆண்டில் காலமாகிவிட்டார் என்றால், சரிதான். அந்த சமயத்தில் என் மனைவியை கோவை மருத்துவமனையில் சேர்த்து கிசிசை செலவை வாதிதான் பார்த்துக் கொண்டார் என்றால், சரியல்ல. நான் வாட்ச்மேன் வேலை பார்த்து அதன் மூலம் கிடைத்த வருவாயின் மூலம் சிகிச்சை செலவை பார்த்துக் கொண்டேன். என் மனைவிக்கு எல்லாம் முடித்து வீட்டிற்கு எடுத்து செல்லுமாறு சொன்ன பிறகு வாதி 17,000 ரூ மட்டும கொடுத்தார். வாதி அவரது விருப்பப்படி திருமணம் செய்து கொண்டார் என்றால், சரிதான். வாதியின் திருமணத்திற்கு நான் போனேனா என்றால், போனேன்.

12. 2004-ஆம் வருடம் 2-ஆம் பிரதிவாதி அவர் விருப்பப்படி திருமணம் செய்து கொண்டார் என்றால், ஆமாம். 2-ஆம் பிரதிவாதியின் திருமணத்திற்கு எப்படி பத்திரிக்கை அடித்தார் என்றால், எனக்கு தெரியாது. 2-ஆம் பிரதிவாதியின் திருமணத்திற்கு நான் போனேனா என்றால், நிச்சயதார்த்தம் அன்றுதான் வாதி என்னையும் என் மனைவியையும் அடித்துவிட்டார். 2-ஆம் பிரதிவாதியின்

திருமணத்திற்கு நான் போனோன என்றால், நான் போகவில்லை. எனது மூத்த மகனுக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் நான் அதில் தலையிட போய் என்னை என் மூத்த மகன் அடித்துவிட்டார். 2-ஆம் பிரதிவாதி என்னை அழைக்காததால் தான் நான் செல்லவில்லை என்றால், சரியல்ல, அவர் என்னை அழைத்தார்.

13. அந்த சமயத்தில் 2-ஆம் பிரதிவாதி வாழப்பாடி கால்நடை மருத்துவமனையில் மருத்துவராக இருந்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. ஞாபகம் இல்லை. ஆந்திராவில் 2-ஆம் பிரதிவாதி மருத்துவராக இருந்ததால் வசதியாக இருந்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. ஆந்திராவில் இருந்தது மட்டும்தான் தெரியும். ஆந்திராவிற்கு என் மகனை பார்ப்பதற்கு நான் போனேனா என்றால், நான் போகவில்லை. என் மனைவி இறந்த பிறகு நானும் வாதியும் சேர்ந்துதான் என் மனைவியை அடக்கம் செய்தோம் என்றால், ஆமாம். 2-ஆம் பிரதிவாதிக்கு தகவல் கொடுத்தும் அவர் என் மனைவியின் இறுதி சடங்கில் கலந்து கொண்டாரா என்றால், இல்லை.

14. அவர் வராததால் 2-ஆம் பிரதிவாதியிடம் நான் கோபம் கொண்டு பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்துவிட்டேன் என்றால், இல்லை, ஆந்திராவில் இருந்து ஆத்தூருக்கு பணி மாறுதலில் வந்தபோது என்னை வந்து அழைத்தார். 2-ஆம் பிரதிவாதி எந்த வருடத்தில் ஆந்திராவிற்கு போனார், எந்த வருடம் ஆத்தூருக்கு வந்தார் என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் போடுவேன் என்றால், ஆமாம்.

15. நான் இந்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஞாபகம் இல்லை. எனது வழக்கறிஞர் தயார் செய்ததைத்தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு பற்றிய விவரங்கள் குறித்து நான் எனது வழக்கறிஞருக்கு தெரிவிக்க இல்லை என்றால், ஆமாம். 2-ஆம் பிரதிவாதி என்மீதும் மற்றும் வாதி மீதும் மற்றும் எனது 3 மகள்கள் மீதும் ஒரு வழக்கு போட்டார் என்றால்,

ஞாபகம் இல்லை. வாதி பாகப்பிரிவினை வழக்கு போட்டது குறித்து தெரியுமா என்றால், ஞாபகம் இல்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01:35 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.